தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 17, பவ - திருவள்ளுவர் ஆண்டு 2025

1994, ஏப்ரல் 30, சனிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 11.30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்'

ஒருவர் செல்வம் பெற்றதனால் பெறும் பயன் என்னவென்றால் அவர் தன் சுற்றத்தால் கூட்டுணர்வோடு சூழப்படுமாறு அவர்களைத் தழுவிக் கொண்டு வாழ்தலே ஆகும்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுகுறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

1. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுந்தரதாஸ் அவர்கள், (குறுக்கிடு) திரு. ஞானசேகரன், நீங்கள் கொடுத்தது இன்று வராது என்று சொல்லியிருக்கிறேன். நீங்கள் 10.20 மணிக்குத் தான் கொடுத்திருக்கிறீர்கள். திங்கட்கிழமை அதை எடுத்துக் கொள்ளலாம்.